செயற்பொறியாளர்(வே.பொ), உதகமண்டலம் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.எஸ்.பிரபு, பி.இ

செயல்முறை ஆணை எண்: அ/2384/2019. நாள்: 26.11.2019

பொருள்: நியமனம்-தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி 4-ல் அடங்கிய பணிகள்-நேரடி போட்டித் தேர்வு 2015-16, 2016-17 மற்றும் 2017-18- இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணியாளர் சேர்ந்து கொண்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1.செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண்.1012/PSD-G2/2019, நாள்: 20.02.2019 மற்றும் 27.02.2019.
2.சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பமே) அவர்களின் செயல்முறை ஆணை எண். அறிபி5/139388/2018 நாள்: 05.03.2019.
3.சென்னை, நந்தனம், தலைமைப் பொறியாளர்(வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணை எண். அப2/8448/2019, நாள்: 08.03.2019.
4.இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ/ 734 /2019 நாள்: 18.03.2019.
5.வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். அப3/23567/2019 நாள்: 20.07.2019.
6.தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை, அவர்களின் கடித எண். அப2/8448/2019, நாள்: 14.08.2019.
7.உதவி செயற்பொறியாளர்(வே.பொ) குன்னூர் அவர்களின் கடிதம் எண். ஆ/ 273 /2019 நாள்: 12.11.2019

---

ஆணை:

பார்வை-1 முதல் 4-ல் காணும் உத்தரவுகளின்படி 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ஆம் ஆண்டில் தொகுதி-IVல் அடங்கிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் போட்டி தேர்வின் வழியாக தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்துக் கொண்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக பார்வை 5 மற்றும 6-ல் காணும் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பார்வை-7ல் காணும் உதவி செயற்பொறியாளர்(வே.பொ) குன்னூர் அவர்களின் கருத்துருவினை ஏற்று மேல்குறிப்பிட்டவாறு பணி நியமனம் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளர்(வே.பொ) குன்னூர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து கொண்ட கீழ்க்காணும் இளநிலை உதவியாளரின் பணியினை பின்வருமாறு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | இளநிலை உதவியாளர் பெயர் (பிணையமற்றது) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.என்.ராதாமணி | 18.03.2019 பி.ப | 18.03.2019 பி.ப |

இப்பணிவரன்முறை ஆணை கீழ்காணும் நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட்டது
"This regularization is subject of the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination IV for the year 2015-2016, 2016-17 & 2017-18 recruitment"

இப்பணியாளரை பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

இப்பணியாளர் தகுதிகாண் பருவகாலத்தில் வரையறுக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணையிடப்படும் எனவும், அதன் பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

26/11/19

செயற்பொறியாளர்(வே.பொ)
உதகமண்டலம்.

பெறுநர்:

திருமதி.என்.ராதாமணி, இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) மூலம் மற்றும் நகல்- உதவி செயற்பொறியாளர்(வே.பொ) குன்னூர்- தனியரின் பணிப்பதிவேடு 1பவுண்டு வால்யூம், பதிவுறுத்தாள்-1 எண் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்படி செயல்முறை ஆணையின் விவரத்தினை உரிய பதிவுகள் செய்து இவ்வலுவலகத்திற்கு விவரம் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப்பொறியாளர்(வே.பொ), நீலகிரி மண்டலம்,உதகை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை-35 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை-5 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

ஆ.மு மெ.எண்.அ. /19 நாள் .12.2019

உரியவருக்கு சார்பு செய்யப்படுகிறது

ஆம்.எல்.சக்திவேல்
உதவி செயற் பொறியாளர்(வே. பொ) (பொ)
சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்
குன்னூர்

பெறுநர்: திருமதி. என். ராதாமணி
விண்ணப்பதாரர்.

/ ஒப்பம் /